சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலன் – 6 வயதுக்குட்பட்ட பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் துவங்க ரூ. 19.40 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை –வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.திந. 2.1) த் துறை

அரசாணை(நிலை) எண்.55 நாள்:20–07–2010

ஆடி 4, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. மானியக் கோரிக்கையின் போது 13–05–2010 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு.

மேலும் படிக்க:

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதம் எண். 3676 / ஊ.மா. 2.1/2010, நாள் 26.5.2010

-------

**ஆணை:**

செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் 2006–2007ம் ஆண்டில் 10 மாவட்டங்களிலும் பின்னர், 2008–2009ம் ஆண்டில் மீதமுள்ள 21 மாவட்டங்களிலும் துவங்கப்பட்டு, இம்மையங்களில் 0–2½ வயதில் உள்ள செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனுடைய குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர் என்றும், செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனுடைய 17 குழந்தைகள் இயல்பான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர் என்றும், இதே போன்று 0–6 வயதிற்குட்பட்ட மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனுடைய குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் 30 மாவட்டங்களில் 2007–08 நிதியாண்டில் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேலும் தற்சமயம் செவித் திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனுடைய குழந்தைகளுக்கு மட்டுமே ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட 0–6 வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு எவ்வித ஆரம்ப நிலை பயிற்சி மையங்களும் செயல்படுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13–5–2010 அன்று இந்த ஆண்டு, பார்வை குறைபாடு உடைய ஆறு வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி சிறார்களுக்காக ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Centres) அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் 5 மாவட்டங்களில் முதல் கட்டமாகஅமைக்கப்படும். என்றும், பார்வையற்ற சிறார்கள் மற்ற குழந்தைகள் போல சாதாரண பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயில

தேவையான திறன்களை வளர்ப்பதும், மாற்றுத்திறனாளிகளின் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் தக்க ஆலோசனைகள் வழங்குவதும் இந்த மையங்களின் நோக்கம் ஆகும் என்றும் அறிவிக்கப்பட்டது. மேலும் தற்போது 6 வயதிற்குட்பட்ட பார்வை திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு வரையறுக்கப்பட்ட ஆரம்பநிலை குழந்தை பருவ கல்வி திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை என்பதால் 6 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் சிறப்புப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர் என்றும், இதனால் இயல்பான பள்ளிகளில் ஒருங்கிணைப்பதில் சிரமம் ஏற்படுகின்றது என்றும், சிறப்புப் பள்ளி சூழலில் குழந்தைகள் தங்கள் குடும்பத்தினர் மற்றும் சமுதாயத்தை விட்டு தனிமைப் படுத்தப்படுகின்றனர் என்றும், ஆரம்ப நிலை குழந்தை பருவ கல்வித் திட்டத்தின் மூலம், குழந்தைகளுக்கு கல்வி வழங்கப்பட்டு மற்றும் பெற்றோர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்குவதால், குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வழி வகுக்கப்படுகின்றது என்றும், தினசரி வாழ்க்கைக்கான அன்றாட செயல்களை(Activities of daily life) சுயமாக செய்து கொள்ளல் மற்றும் ஆரம்பநிலை கற்றல் ஆகியவற்றிற்கான ஆற்றல்களை வளர்த்தல், மற்றும் அவர்களின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு ஆலோசனைகள் மற்றும் பயிற்சி வழங்குதல் ஆகியவை அவசியமாகிறது என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், இளம்வயதிலேயே உரிய பயிற்சி வழங்கப்படாததால் பார்வை குறையுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகள் தினசரி வாழ்க்கையில் அன்றான செயல்களைச் சுயமாக மேற்கொண்டு தங்களை பராமரித்துக்கொள்வதிலும் பள்ளியில் பிற குழந்தைகளுடன் பழகுவதிலும் சிரமத்திற்குள்ளாகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகள் கீழ்க்காணும் குறைந்தபட்ச திறன் வளர்ப்புகள் பெறுவதில் சிரமங்கள் உள்ளன என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

(1) தகவல் பரிமாற்றம் மற்றும் மொழி
(Communication and language)
(2) நுண்ணிய மற்றும் பரவலான இயக்க ஆற்றல்கள்
(Fine and gross motor skills)
(3) எண்ணங்களின் செயல்பாடுகளை புரிந்து கொள்ளுதல்
(Understanding and thought process)
(4) சமூக ஆற்றல்கள் (Social skills)
(5) உணர்வுகள் சார்ந்த வளர்ச்சி (Emotional development)
(6) சுய உதவி (Self-help)

4. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 13–05–2010 அன்று மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து பார்வை குறையுடைய 0–6 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளின் எஞ்சியுள்ள திறன்களை மேம்படுத்தி இயல்பான பள்ளிகளில் சேர்ப்பதற்காக தமிழகத்தில் திருநெல்வேலி, மதுரை, வேலூர், கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களில், ஆரம்ப நிலை பயிற்சி மையங்களை தகுதி வாய்ந்த தொண்டு நிறுவனங்கள் மூலம் முதல் கட்டமாக அமைக்கலாம் என்றும், இப்பயிற்சி மையங்களின்மூலம், உரிய சிறப்பு நிபுணர்களால் குழந்தைகளுக்கு தீவிர ஆரம்ப பயிற்சியும் பெற்றோர்களுக்கு ஆலோசனையும் வழங்கப்படுவதன் மூலம் இக்குழந்தைகள் இயல்பான பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயில வழிவகுக்க இயலும் என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், இந்த ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மூலம் கீழ்க்காணும் சேவைகள் வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

(1) குடும்பத்தினர் பார்வையற்ற மாற்றுத்திறனாளி குழந்தைகளை பராமரிப்பதற்கான ஆலோசனைகள்

(2) ஆரம்ப நிலை பயிற்சிகள்

(3) பார்வையற்ற மாற்றுத் திறனாளி குழந்தைகள் ஆரம்பக் கல்வி பெறுவதற்கான உபகரணங்கள்

ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் குழந்தைகளுக்கு தீவிர பயிற்சி அளித்து 'பிரெய்ல்' எழுத்துக்களை அறிமுகப்படுத்தி அவர்களை இயல்பான பள்ளிகளில் அல்லது உள்ளடங்கிய கல்வி முறை திட்டத்தின் கீழ் கல்வி பெற தயார்படுத்த இயலும் என்றும் தெரிவித்துள்ளார்.
மையத்தின் பணிகள்:

- மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான நல அலுவலருடன் இணைந்து தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பார்வையற்ற மாற்றுத் திறனாளி குழந்தைகளைக் கண்டறிந்து ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் சேர்த்து குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கு உரிய பயிற்சி மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கி இயல்பான பள்ளிகளில் அல்லது உள்ளார்ந்த கல்வி திட்டங்களில் சேருவதற்கு தயார்படுத்துதல்.
- ஒரு பயிற்சி மையத்தில் குறைந்தபட்சம் 16 குழந்தைகளும் அதிகபட்சமாக 20 குழந்தைகளும் பயன் பெறச் செய்தல்.
- இந்திய மறுவாழ்வு குழுவின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி முடித்த சிறப்பாசிரியர்களை இம்மையங்களில் பணி அமர்த்துதல்.
- ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரமான 1 : 8 என்ற முறையை தொடர்ந்து கடைபிடித்தல்.

5. பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒரு ஆரம்பநிலை பயிற்சி மையம் அமைப்பதற்கு கீழ்கண்டவாறு ரூ.3,88,000/– வீதம் 5மையங்களுக்கு ரூ.19,40,000/– செலவினத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கும்படி மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுள்ளார்.

<u>**தொடர் செலவினம்:**</u>

(குழந்தைகளின் எண்ணிக்கை–1 மையத்துக்கு குறைந்தபட்சம் 16 அதிகபட்சம் 20 குழந்தைகள்)

| | தொகை<br>ரூ. |
|---|---|
| இரண்டு சிறப்பு பயிற்றுநருக்கான மதிப்பூதியம்<br>(ரூ.6000 x 2 x 12 மாதங்கள்) | 1,44,000/– |
| ஒரு ஆயாவுக்கான மதிப்பூதியம்<br>(ரூ.1000 x 12 மாதங்கள்) | 12.000/– |
| சில்லரைச் செலவினம் (ரூ.500 x 12 மாதங்கள்) | 6,000/– |
| கட்டிட வாடகை (ரூ.3000 x 12 மாதங்கள்) | 36,000/– |
| பயணச் செலவினம்<br>(ரூ.20/– x 20 (பாதுகாவலர்கள்) x 25 நாட்கள் x 12 மாதங்கள்) | 1,20,000/– |

| | |
|---|---|
| விழிப்புணர்வு /குறைபாடுகளைக் கண்டறிதல் / மதிப்பீடு / ஆலோசனை வழங்குதல் | 20,000/– |
| மொத்தம் | 3,38,000/– |

<u>தொடராச் செலவினம்</u>

| | |
|---|---|
| மரச்சாமான்கள்/கல்வி உபகரணங்கள்/ கல்வி போதிக்க, பயில்வதற்கான உபகரணங்கள் | 50,000/– |
| மொத்தம் | 50,000/– |

––––––––

மொத்த செலவினம் 3,88,000/–

–––––––

ஒரு மையத்திற்கான செலவினம் : ரூ.3,88,000/–

5 மையங்களுக்கான செலவினம் : ரூ.19,40,000/–

(ரூ.3,88,000/– x 5)

(ரூபாய் பத்தொன்பது இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)

6. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த பின்னர் அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

(1) 6 வயதுக்குட்பட்ட பார்வை குறைபாடுடைய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களை முதல் கட்டமாக வேலூர், திருவண்ணாமலை, மதுரை, கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களில் தகுதியான தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் சோதனை அடிப்படையில் அமைக்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

(2) இந்த மையங்களை அமைக்க மேலே பத்தி 5ல் குறிப்பிடப்படுள்ளவாறு, தொடரும் மற்றும் தொடராச் செலவினங்களுக்கான ஒரு மையத்திற்கு ரூ.3,88,000/– வீதம் 5 மையங்களுக்கும் சேர்த்து ரூ.19,40,000/–ஐ (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும் இச்செலவினம் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு இத்தொகையினை முன்பணமாக, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் மூலம் பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

(3) தன்னார்வ தொண்டு நிறுவனங்களை மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில் தேர்வு செய்யவும், நீக்கம் செய்யவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி–6ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண்.45–05ன் கீழ் துவக்கப்பட்ட புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்–பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்II மாநிலத் திட்டம்–MS. பார்வைத் திறன் குறைபாடுடைய 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் தொடங்குதல் 09 உதவித் தொகை–03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை .
(த.தொ.கு.2235 02 101 MS-0938)

8. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல கணக்கு அலுவலர்கள், மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. மேலே பத்தி 6ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் உரிய நேரத்தில் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் "எதிர்பாரா செலவின நிதியிலிருந்து" மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான ஆணை நிதி (வ.செ.பொ.1) துறையிலிருந்து தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொ1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.நிதி(சந)/37360/10, நாள்19.7.10–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.510 (ஐநூற்று பத்து)

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35 (பெயரில்)
நகல்:
நிதி (வ.செ.I/II. சமூக நலன்)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் (திரு. எஸ்.கே.பி) , சென்னை–9.
அரசு செயலாளர் ( மாற்றுத் திறனாளிகள் நலத் துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //